www.tnschools.co.in



**காலாண்டுப் பொதுத் தேர்வு, செப்டம்பர் - 2013** TVK

**வகுப்பு 10** பதிவு எண்

நேரம்: 2.30 மணி **தமிழ் இரண்டாம் தாள்** மதிப்பெண்கள்: 100

**(LANGUAGE - PART A - TAMIL - PAPER II)**

**(இலக்கணம், துணைப்பாடம், கடிதம், கட்டுரை, மொழிப்பயிற்சி)**

***குறிப்பு:*** *i) இவ்வினாத்தாள் நான்கு பிரிவுகளைக் கொண்டது. ii) விடைகள் தெளிவாகவும், குறித்த அளவினதாகவும் அமைதல் வேண்டும். iii) வினா எண் 38க்கு என படிவம் ஒன்று தனியாக வழங்கப்பட்டுள்ளது. அதை நிரப்பி முதன்மை விடைத்தாளுடன் இணைக்கவும்.*

## பிரிவு - I (மதிப்பெண்கள் - 20)

### பகுதி - 1

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க. உரிய விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக:** 5×1=5

1) ஔவையார் - இச்சொல்லில் பயின்று வரும் குறுக்கம் யாது?
அ) மகரக் குறுக்கம் ஆ) ஔகாரக் குறுக்கம் இ) ஆய்தக் குறுக்கம் ஈ) ஐகாரக் குறுக்கம்
2) கீழ்வருவனவற்றுள் பொதுமொழியைத் தேர்ந்தெழுதுக.
அ) கண் ஆ) படம் பார்த்தான் இ) அந்தமான் ஈ) வந்தான்
3) நன்னூல் கிடைக்குமா? எனக் கடைக்காரரிடம் கேட்பது எவ்வகை வினா?
அ) கொடை வினா ஆ) கொளல் வினா இ) அறிவினா ஈ) ஐயவினா
4) ஒரு பொருட்பன்மொழியைத் தேர்ந்தெழுதுக.
அ) நன்கு படித்தான் ஆ) வயிறு வலிக்கும் இ) மீமுசை ஞாயிறு ஈ) காளை வந்தான்
5) ''நல்லவை'' இச்சொல்லை அலகிட்டால் ............ எனப் பிரியும்.
அ) நேர்நேர் ஆ) நிரைநேர் இ) நேர்நிரை ஈ) நிரைநிரை

### பகுதி - 2

**கோடிட்ட இடத்தை நிறைவு செய்க:** 5×1=5

6) மகரக்குறுக்கம் பெறும் மாத்திரை அளவு ............
7) தொழிலைக் குறிக்கும் சொல் ............
8) அங்கே கிடப்பது பாம்போ? கயிறோ? என வினவுவது ............ வினா.
9) கிளி போலப் பேசினாள். இத்தொடரில் இடம் பெறும் உவம உருபு ............
10) விழிக்கயல் - இவ்வுருவகத்திற்கான உவமை ............

### பகுதி - 3

**சுருக்கமாக விடையளிக்க:** 10×1=10

11) வல்லினம் மிகும் இடங்களுள் ஒன்றனுக்குச் சான்று தருக.
12) கிளி கல்லால் அடிபட்டது - **உணர்ச்சித் தொடராக மாற்றுக.**
13) மேடை பேச்சு மிகுந்த பயனை தர வல்லது - **சந்திப்பிழையை நீக்கி எழுதுக.**
14) **தொகைச் சொல்லை விரித்தெழுதுக** - மூவேந்தர்.
15) **கீழ்க்காணும் தொடரில் உள்ள ஒருமை பன்மை பிழை நீக்கி எழுதுக:**
பெண்கள் பெறவேண்டியது பெண்கல்வி, பெண்ணுரிமை, சொத்துரிமை.
16) **உவமையைச் சொற்றொடரில் அமைத்து எழுதுக:** பசுமரத்தாணி போல
17) **பிறமொழிச் சொற்களுக்குரிய தமிழ்ச்சொல் எழுதுக:** இந்த ஷர்ட் மிகவும் காஸ்ட்லியானது.
18) சொல்லிச் சொல்லி - **இலக்கணக்குறிப்புத் தருக.**
19) **கீழ்க்காணும் உரைப்பகுதிக்கு பொருத்தமான நிறுத்தற்குறிகள் இட்டு எழுதுக:**
சட்டத்தை மதிப்போம் குற்றம் களைந்த வாழ்வை வாழ்வோம் சட்டம் நம்மைக் காக்கும்
20) **கீழ்க்காணும் மரபுத் தொடர் குறிக்கும் பொருளை எழுதுக:** திருமணம் என்பது ஆயிரம் காலத்துப்பயிர்.

## பிரிவு - II (மதிப்பெண்கள் - 10)

**கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் ஐந்தனுக்கு விடையளிக்க:** 5×2=10

21) ஔகாரக் குறுக்கத்தை சான்றுடன் எழுதுக.
22) வினா எத்தனை வகைப்படும்? அவை யாவை?
23) வினையெச்சம் என்றால் என்ன? அதன் வகைகள் யாவை?
24) மொழியின் வகைகள் யாவை?
25) இனங்குறித்தல் என்றால் என்ன? எடுத்துக்காட்டுடன் விளக்குக.
26) **பகுபத உறுப்பிலக்கணம் தருக** - எய்துவர்
27) உடன்பட்டுக் கூறும் விடையின் பெயரென்ன?

## பிரிவு - III (மதிப்பெண்கள் - 50)

குறிப்பு: பகுதி - 3 இல் வினா எண் 35-ல் காதுகேளாத மாணவர்களுக்கு மட்டும் மாற்றுவினா வழங்கப்பட்டுள்ளது.

### பகுதி - 1

**கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் இரண்டனுக்கு விடையளிக்க:** 2×5=10

28) தற்குறிப்பேற்ற அணியைச் சான்றுடன் விளக்குக.
29) தேவர் அனையர் கயவர் அவரும் தாம் மேவன செய்தொழுக லான்.
**இக்குறளில் பயின்று வந்துள்ள அணியைச் சுட்டி விளக்குக. (அல்லது)**
உவமை அணியைச் சான்றுடன் விளக்குக.
30) ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை, இழுக்கத்தின்
எய்துவர் எய்தாப் பழி. **-இக்குறட்பாவிற்கு அலகிட்டு வாய்பாடு தருக:**

### பகுதி - 2

**கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் இரண்டனுக்கு ஒவ்வொன்றிற்கும் அரைப்பக்க அளவில் விடை தருக:** 2×5=10

31) பரிதிமாற் கலைஞரின் தமிழ்த்தொண்டினை எழுதுக.
32) அன்றாட வாழ்வில் பயன்படும் சட்டங்கள் குறித்துக் கட்டுரை எழுதுக.
33) அண்ணா எழுதிய கடிதத்தின் கருத்துகளைச் சுருக்கி எழுதுக.

பகுதி - 3

34) அ) கீழ்க்காணும் பத்தியில் அமைந்துள்ள ஆங்கிலச் சொற்களைத் தமிழாக்கம் செய்க: 3+2=5

"டாடி வாற சண்டே எனக்கு பர்த்டே, பட் நீங்க இன்னும் எனக்கு பர்த்டே டிரஸ் எடுக்கவில்லையே, வொய் டாடி? என்னோட பிரண்ட்ஸையெல்லாம் வீட்டுக்கு வரச் சொல்லிக் கால் பண்ணியிருக்கிறேன்.

ஆ) கீழுள்ள அரபு எண்களைத் தமிழெண்களாக மாற்றுக: 54, 73, 268, 140

35) அ) கீழ்க்காணும் ஆங்கில உரைப் பத்தியைத் தமிழாக்கம் செய்க: 3+2=5

Trees are very useful to us. They give us timber and fire wood. The timber is used to make chairs, tables and other furniture. We get oil from the oil seeds of some trees. The leaves and fruits of some trees are used to prepare medicines.

ஆ) கீழ்க்காணும் ஆங்கிலப் பழமொழிகளில் எவையேனும் இரண்டனுக்கு இணையான தமிழ்ப் பழமொழிகளை எழுதுக:

1) Health is Wealth 2) Diamonds cut Diamonds 3) Union is Strength 4) Time is Gold

குறிப்பு: காதுகேளாத மாணவர்களுக்கான மாற்று வினா.

உலகிலேயே மிகவும் அற்புதமான, நம்ப முடியாத சாதனை செய்பவர்கள் யார்? எப்போதும் நம்பிக்கை குறையாமல் வாழ்கிறவர்கள் எவரோ, அவர்கள் தாம் மாற்றுத்திறனாளியரிடம் இத்தகைய நம்பிக்கையை அதிகமாகவே காணலாம்.

தன்னம்பிக்கை ஒன்றையே இவர்கள் தம் வாழ்வில் குறிக்கோளாகக் கொண்டார்கள். வெற்றியும் கண்டார்கள்.

நான்கு வயதில் ஏற்பட்ட நிமோனியா காய்ச்சலினால் இனி, நடக்கவே முடியாது என மருத்துவரால் கூறப்பட்ட வில்மா ரு டால்ப் என்னும் பெண்மணி தன்னம்பிக்கையும் விடாமுயற்சியையும் கைவிடவில்லை. இடைவிடாத பயிற்சியும், துணிவும் கொண்டு விளங்கிய வில்மா, பதின்மூன்று வயதில் ஓட்டப் போட்டிகளில் கலந்து கொண்டாள். 1960 ஆம் ஆண்டு நடைபெற்ற ஒலிம்பிக் போட்டியில் பங்கு பெற்ற வில்மா, ஒரே ஒலிம்பிக் போட்டியில் மூன்று தங்கங்களை வென்ற பெண்மணி எனப் பாராட்டப் பெற்றார்.

1) சாதனை செய்பவர்கள் யார்? 2) நம்பிக்கை யாரிடம் அதிகமாக உள்ளது?
3) வில்மா ரு டால்ப் எத்தனை வயதில் ஓட்டப் போட்டிகளில் கலந்து கொண்டார்?
4) 1960 ஆம் ஆண்டு நடைபெற்ற ஒலிம்பிக் போட்டியில் வில்மா ரு டால்ப் எத்தனை தங்கங்களை வென்றார்?
5) வாழ்வின் உயிர்நாடி எது?

பகுதி - 4

கீழ்க்காணும் வினாக்களுள் ஒன்றனுக்கு விடையளிக்க: 1×5=5

36) அ) தென்றல் பத்தாம் வகுப்பில் படிக்கிறாள். மாலை வேளை பள்ளி முடிந்து வீடு திரும்பும் நேரம். சாலையில் போக்குவரத்து அதிகம். அப்போது ............. (அல்லது)

ஆ) கீழ்க்காணும் தலைப்பில் எட்டு வரிகளுக்குக் குறையாமல் கவிதை ஒன்று எழுதுக:
கடல் (அல்லது) குழந்தை

பகுதி - 5

37) கீழ்க்காணும் பாடலின் திரண்ட கருத்தை எழுதி, அப்பாடலில் அமைந்துள்ள ஏற்புடைய நயங்களை எடுத்தெழுதுக: 1×5=5

வாழ்வினில் செம்மை வேண்டும்
வாய்மையே பேச வேண்டும்
பாழ்செய்ல் விலக்கல் வேண்டும்
பண்பினைக் காத்தல் வேண்டும்
தாழ்வினை அகற்ற வேண்டும்
தருக்கினை விடுதல் வேண்டும்
சூழ்நிலை உணர்தல் வேண்டும்
சோம்பலைப் போக்க வேண்டும்.

பகுதி - 6 5

38) கொடுக்கப்பட்டுள்ள வங்கிப் படிவத்தை நிரப்புக. பெயர் நிரப்பும் இடத்தில் உமது பதிவு எண்ணை மட்டும் எழுதுக.

பகுதி - 7

39) அ) கீழ்க்காணும் வாழ்வியல் சூழலைப் படித்து விடையளிக்க: 3+2=5

"யாழினி! நீ ஏன் பெயர் கொடுக்கவில்லை?" என்று ஆசிரியர் கேட்ட வினாவுக்கு என்ன விடை கூறுவது என்று தெரியாமல் நின்றாள். நாளை ஒரு நாள் தான் இருக்கிறது. எண்ணி முடிவு சொல் என்று கூறியவாறே ஆசிரியர் வகுப்பிலிருந்து வெளியே சென்றார்.

யாழினி, உன் மீது நாங்கள் எவ்வளவு நம்பிக்கை வைத்திருந்தோம். உன் அழகான கையெழுத்தும், செறிவான கருத்தும் கட்டுரைப் போட்டியில் உனக்குப் பரிசு பெற்றுத் தருமல்லவா? ஆனால் நீயோ போட்டியில் கலந்து கொள்ள மறுக்கிறாய் என்ன காரணம்? என்று அவளுடைய தோழிகள் வினவினர்.

எனக்குப் போட்டிகளில் கலந்து கொள்வது என்றாலே மிகவும் அச்சமாக உள்ளது. நீங்கள் நினைப்பது போல் என்னால் சிறப்பாகச் செய்ய முடியுமா? என்று தெரியவில்லை. என் கட்டுரைக்குப் பரிசு கிடைக்கவில்லையென்றால் என்னால் தாங்கிக் கொள்ள முடியாது என்று யாழினி அவர்களுக்குப் பதிலளித்தாள்.

1) யாழினியின் செயல் சரியானது தானா?
2) நீங்கள் யாழினியாக இருந்தால் என்ன செய்வீர்கள்?
3) இச்சூழலிருந்து நீங்கள் பெறும் பண்பு யாது?

ஆ) கீழ்க்காணும் சூழலைப் படித்து விடையளிக்க:

மாறன் பத்தாம் வகுப்புப் படிக்கிறான். சில நாளாக அவனுடைய செயல்களில் மாற்றம் ஏற்பட்டிருப்பதைப் பெற்றோர் உணர்ந்தனர். பள்ளி நேரம் முடிந்தும் அவன் வீட்டிற்குத் தாமதமாக வருகின்றான். காரணம் கேட்டால், உண்மையைச் சொல்ல மறுக்கிறான். வீட்டில் அடிக்கடி பணம் கேட்டுத் தொந்தரவு செய்கின்றான். நல்ல நண்பர்களுடன் அவன் பழகாததே இதற்குக் காரணம் என்று பெற்றோர் நினைக்கின்றனர்.

1) பெற்றோர் மாறனைப் பற்றி நினைப்பது சரியா?
2) நாம் எப்படிப்பட்டவர்களோடு நட்புக் கொள்ள வேண்டும்?

பிரிவு - IV (மதிப்பெண்கள் - 20)

பகுதி - 1

40) கீழ்க்காணும் வினாக்களுள் ஒன்றனுக்கு விடையளிக்க: 1×10=10

அ) நும் ஊருக்குக் குடிநீர் வசதி வேண்டி நகராட்சி ஆணையருக்கு விண்ணப்பம் ஒன்று வரைக. (அல்லது)

ஆ) நீ கண்டு களித்த இடம் குறித்து நண்பனுக்குக் கடிதம் ஒன்று வரைக.

பகுதி - 2

41) கீழ்க்காணும் வினாக்களுள் ஏதேனும் ஒன்றனுக்குக் குறிப்புகளைக் கொண்டு ஒரு பக்க அளவில் கட்டுரை எழுதுக. தலைப்பு ஒன்று தருக: 1×10=10

அ) முன்னுரை - சிக்கனமும் சிறுசேமிப்பும் - சேமிப்பின் நோக்கம் - சேமிப்பு பற்றிய பழமொழிகள் - சேமிக்கும் வழிகள் - சேமிப்பின் பயன்கள் - முடிவுரை. (அல்லது)

ஆ) நீரின்றி இயங்காது உலகம் - நீர் நிலைகள் அடிப்படை - நீர் பற்றாக்குறை ஏற்படக் காரணம் - நீரைச் சேமிக்கும் வழிகள் - மழை நீரைச் சேமித்தல் - நிலத்தடி நீரைச் சேமித்தல் - வழிமுறைகள் - மரம் வளர்ப்போம் - மழை பெறுவோம்.